**முலடியன பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முலடியன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, முலடியன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 433,517 இற்கான வருமானம் ஒன்று பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் பலவின இருப்புக்கள் 09 விடயங்களின் மீதி ரூபா 10,272 தொகை மிகையாகவும், 40 விடயங்களின் மீதி ரூபா 151,863 தொகை குறைவாகவும் ஆக பலவின இருப்பு ரூபா 141,591 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலுவை ஏனைய வருமானக் கணக்கின் மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 4,272,150 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 26,896,799 இற்கான 3 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 24(1) | 2014 ஆண்டின் பின்னர் 13 பிரிவுகள் தொடர்பாக இனங்காணப்பட்டிருந்த 813 பாதைகள் வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களின் புவியியல் சார் தகவல்கள் வலையமைப்பொன்று நிர்மாணிப்பதற்காக முறையான செய்முறையொன்று தயாரிக்கும் வரை பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்கக் கூடாது என உள்ளூராட்சி திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் நிதிப் பிரமாணம் 772(1) | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த 43 டயர்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | நிதிக் குழுவின் பரிந்துரையின் படி எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 2,258,639 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்ரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 155,125 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,891,205 | 1,535,109 | 1,564,833 | 43,420 | 1,492,200 | 22,889 | 44,354 | 73,144 |
| ii. | வாடகை | 8,923,500 | 7,215,922 | 7,553,006 | 428,157 | 12,459,200 | 3,288,425 | 4,042,085 | 765,241 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 592,050 | 595,161 | 555,161 | 59,450 | 540,200 | 1,508,342 | 1,571,342 | 19,450 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 8,784,605 | 5,606,409 | 1,087,617 | 5,290,844 | 12,668,000 | 900,713 | 389,278 | 772,052 |
| | | 20,191,360 | 14,952,601 | 10,760,617 | 5,821,871 | 27,159,600 | 5,720,369 | 6,047,059 | 1,629,887 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134(1) இற்கு இணங்க முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்காணப்பட்டிருந்த 04 பிரிவுகள் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் | வீதவரி பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்பட்டிருந்த போதிலும், அவற்றின் மூலம் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 1946 இன் 12 ஆம் இலக்க களியாட்டவரி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இற்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடைபெறும் விழாக்களின் மூலம் களியாட்ட வரி அறவீடு செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது தெய்யந்தர பஸ் நிலையத்தில் நடைபெற்ற கொண்டாட்டம் மற்றும் இசை விழாவிற்காக முறைப் பிரகாரம் களியாட்ட வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொண்டாட்டம் மற்றும் இசைவிழா நடைபெறும் சந்தர்ப்பத்தில் முலடியன பிரதேச சபையின் களியாட்ட வரி விதித்திருக்காமையினால் வரி அறவீடு செய்வதற்கு முடியுமாக இருந்தது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 70 கடையறைகள் 60 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 18 வாடகையாளர்களிடம் ரூபா 407,037 இற்கான கடை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மேலும் அந்த நிலுவை வாடகை மீதியில் மூடப்பட்டிருந்த 10 கடையறைகளுக்கான 2008-2013 ஆண்டு கால வீச்சு தொடர்பாக சிட்டையிடப்பட்டிருந்த ரூபா 318,850 இற்கான கடையறை வாடகையும் அடங்கியிருந்தது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். என. |
| (ஈ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பந்தி 11 இன் ஏற்பாடுகளுக்கு புறம்பாக சபைக்கு சொந்தமான 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் 04 கடையறைகளில் வேறு தரப்பினருக்கு துணை வாடகை கொடுக்கப்பட்டிருந்தது. | ஏனைய தரப்பினர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படவில்லை என வாடகையாளர்கள் கூறுகின்றனர் எனவும் வாய்மொழி மூலம் மாத்திரம் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது எனவும், சபைக்கு வாடகையாளர்களினால் உரிய முறையில் மாதாந்த வாடகை செலுத்தப்படுகின்றது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | பிரதேச சபை அலுவலகக் கட்டிடத்தில் அமைந்துள்ள 08 கடையறைகள் சபையின் அங்கீகாரமின்றி கொரிடோ மறையக் கூடியவாறு முன்பக்கமாக விரிவாக்ககுதல் மற்றும் கடையறைகளின் உட்பகுதியில் இரும்பின் மூலம் மாடியொன்று மற்றும் அதற்கு நுழையும் படியும் தயாரிக்கப்பட்டு கடையறைகள் கட்டிடத் தொகுதியின் வரைபுக்கு புறம்பாக நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 ஜுலை 21 திகதி மு.பி.ச.(உ) 1 இன் படி சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய உத்தியோத்தர்களிடம் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 904,234 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,440,398 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நீதிமன்றத் தண்டப் பணத்தில் ரூபா 654,234 தொகை மற்றும் ரூபா 12,440,398 இற்கான முத்திரைக் கட்டண தொகையில் ரூபா 5,245,766 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஜனவரி 18 திகதியளவிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இற்கு இணங்க பின்வரும் விடயங்களுக்காக துணைச் சட்டங்கள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(i) நகரம் சாராத அதிகாரப் பிரதேசத்தில் கட்டிட வரைபுகள் அங்கீகரித்தல் மற்றும் காணி துணைப் பகிர்வுகள் மேற்கொள்ளல்<br>(ii) கேட்போர் கூடத்தை வாடகைக்கு கொடுத்தல்<br>(iii) சபைக்குத் சொந்தமான முலடியன மற்றும் மாக்கந்துர விளையாட்டு மைதானங்களை வாடகைக்கு கொடுத்தல். | கேட்போர் கூடம் மற்றும் விளையாட்டு மைதானம் வாடகைக்கு கொடுத்தல் துணைச் சட்டங்கள் ஆக்கியிருக்கவில்லை எனவும் நகரம் சாராத எல்லையில் கட்டிட வரைபுகள் மற்றும் காணித் துணைப் பகிர்வுகள் அங்கீகரித்தல் தொடர்பான துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் மாத்தறை மாவட்டத்திற்கு பொருத்தமான விதத்தில் துணைச் சட்டம் ஒன்று தயாரித்து வழங்கப்படும் என அறிவித்திருந்தமையால் அதனை வழங்கிய பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணைச் சட்டங்கள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் குப்பை 01 தொன் இற்கும் 02 இற்கும் இடைப்பட்ட அளவாகக் காணப்பட்டதுடன் உக்காத குப்பைகளை மீள்சுழற்சிக்கு அனுப்புவதற்கு செயற்படாமல் தெய்யந்தர தங்ஹேன காணியில் கிடங்குகளில் புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சபையினால் செயற்படுத்தப்பட்ட சேதனப் பசளை செயற்திட்டற்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உக்காத பொருட்களை தெரிவு செய்து மீள்சுழற்சி செய்யப்படும் நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றது எனவும், சேதனப் பசளை செயற்களத்தின் கழிவுநீர் வடிந்து செல்வதற்காக கழிவுநீர் தொட்டி ஒன்று நிர்மாணிப்பதற்காக கொங்கிரீட் திணிப்பு தயாரித்த பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான குப்பை முகாமைத்துவ திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகளின் கூரைகள் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் 10 கடையறைகள் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்தது. | முலடியன வர்த்தக கட்டிடத் தொகுதியின் 07 கடையறைகளின் கூரைகளில் காணப்படும் சிதைவடைந்த தன்மையின் காரணமாக மூடப்பட்டுள்ளது எனவும், அதனை வாடகைக்கு பெறுவதற்காக முன்வராமையால் மாக்கந்துர வர்த்தக கட்டிடத் தொகுதியில் ஒரு கடையறை மூடப்பட்டுள்ளது என. | திருத்த வேலைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 முதல் 2020 வரை 156 கட்டிட விண்ணப்பப் பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டு அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு 3 வருடங்களுக்கும் 7 இற்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றில் 43 கட்டிடங்களுக்காக மாத்திரம் இணக்கச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தது. அவை அங்கீகரிக்கப்பட்ட கட்டிட விண்ணபங்களின் எண்ணிக்கையில் 28 சதவீதமாக காணப்பட்டது. | வதிவதற்கு பொருத்தமான நிலைமையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவித்த பின்னர் அவர்கள் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், அவ்வாறு மேற்கொள்ளப்படாத நிர்மாணிப்போருக்கு நினைவூட்டல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு மீளாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகள் தொடர்பாக 1 சதவீதக் கட்டணம் ரூபா 22,075 தொகை குறைவாக அறவீடு செய்யப்பட்டிருந்தது. | 149 ஆம் பிரிவிற்கு இணங்க 1 சதவீதத்தை மிகைக்காத 0.5 சதவீதம் என விதிக்கப்பட்டு 2021 ஆண்டில் கட்டணம் அறவீடு செய்யப்பட்டது எனவும், 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது சேவைக் கட்டணம் விடுவிக்கப்பட்டமையால் கட்டணத்தின் குறைவொன்று காட்டப்பட்ட போதிலும் 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி ரூபா 13,359 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டது என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட எண்ணெய் ஆலை ஒன்றிற்காக 2022 ஜனவரி 27 திகதிய 2264/18 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்காததுடன், 2022 ஒக்தோபர் 12 திகதி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபுகள் சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்ட போதிலும் கட்டிட வரைபுகள் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட கட்டிடத்தின் வரைபினை அங்கீகரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளும் படி அதன் உரிமையாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 28(1) ஏற்பாடுகளுக்க புறம்பாக அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்திருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 06 நிர்மாண வேலைகளில் 3 நிர்மாண வேலைகளுக்குரிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு திட்டக் குழுவினால் பரிந்துரை சமர்ப்பித்திருக்காததுடன், 3 இற்குரிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த நிர்மாணிப்போருக்கு அறிவுருத்தப்பட்டு ஆரம்ப நடவடிக்கை என காணியை அங்கீகரிக்கும் செய்முறைக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அவர்கள் அதனை தவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் அங்கீகாரமற்ற நிர்மாணவேலை என கணித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழிற்சங்க மாநாட்டிற்கு கலந்து கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு தனியார் தரப்பினருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள சட்டஏற்பாடுகள் காணப்படாத போதிலும் 2023 ஜுலை 29 திகதி மட்டக்களப்பு சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் 2023 ஆண்டிற்காக வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பிரதேச | 2023 ஜுன் 20 ஆந் திகதிய தென் மாகாண ஆளுனரினால் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் கீழ் மாத்தறை புகையிரத நிலையத்திலிருந்து பெற்றுக் கொண்ட விலைகளின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | தாபனக் கோவை நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

சபையின் 8 உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக ரூபா 101,600 தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 99,446,851 பெறுமதிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு டென்டர் அழைத்தல் மூலம் ரூபா 20,855,246 இற்கான உடன்பாட்டுத் தொகைக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்த 4 நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர் பல்வேறு காரணங்களை சுட்டிக் காட்டி குறிப்பிட்ட உடன்படிக்கை காலத்தில் ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்யாதிருந்த போதிலும் ஏனைய வெளிக்காரணங்களினால் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டு இருந்த காரணத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதிகளும் அழிவடைந்து காணப்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. மேலும் குறிப்பிட்ட உடன்பட்டிருந்த காலத்தினுள் ஒப்பந்த வேலை பூர்த்தி செய்திருக்காத ஒப்பந்தக்காரரின் செயலாற்றுகை பிணைமுறியை சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோது ஒப்பந்தக்காரருக்கு ஏனைய வெளி சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடல், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மூலப்பொருள் தட்டுப்பாடு காணப்படல், 2021 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக அரசாங்கத்தினால் அடுத்த வருடம் ஏற்பாடுகள் வழங்காமையினால் மாக்கந்துர வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலைகள் தெய்யந்தர மீன் பலகை நிர்மாணித்தல் மற்றும் பிரதேச சபையின் கராஜ் நிர்மாணித்தல் ஆகிய நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டது எனவும் தெய்யந்தர வர்த்தக கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது எனவும் | ஆக்கபூர்வமாக செயற்திட்டங்கள் செயற்படுத்த வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப சேவை தொகுதியைச் சேர்ந்த 05 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி எண்ணிக்கை நிரப்பப்பட்டிருந்த போதிலும் நாளாந்தம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 9 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு குறிப்பிட்ட கடமைகளுக்கு புறம்பாக கடமைகள் சாட்டப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் மற்றும் ஆளுனரின் அங்கீகாரத்தின் கீழ் சேவையின் தேவைப்பாட்டின் படி சேர்க்கப்பட்டு எழுத்துமூலம் கடமைகள் சாட்டப்பட்டிருந்தது என. | பதவிக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |